# TOR

# TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

## டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

நவம்பர் 2025 | மலர் -04 | இதழ் - 8 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/-





EPIC TOYOTA
URBAN CRUISER
HYRYDER
EXPERIENCE Awesome
WITH EVERY DRIVE
60 MINUTE
EXPRESS SERVICE
CAR SERVICE ON VIDEO CALL
FREE PICK & DROP
URBAN CRUISER
HYRYDER
EPIC TOYOTA
EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979



நிறுவனர் & தலைமை ஆசிரியர்
**சி.நவின் பிரகாஷ்**

# தொகுப்பாளர் உரை

Tiimes of Republic நாளிதழ் சார்பாக உங்கள் அனைவருக்கும் மிலாடி நபி மற்றும் ஓணம் தின நல்வாழ்த்துக்கள். இந்த மாதம் நடைபெற்ற பேசும் பொருளாகிய விவாதங்கள், பல பிரபலமான நிகழ்வுகளை தங்களது கருத்துக்களின் மூலம் பதிவு செய்துள்ளோம். பீகாரில் வாக்காளர் அதிகார யாத்திரையில் திரண்ட கூட்டம், அதிமுகவில் பிரிந்தவர்களை சேர்க்கக் கோரி திடீரென கொடி பிடித்த செங்கோட்டையன், பாமகவில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணி, பாஜக கூட்டணியில் இருந்து விலகிய டிடிவி தினகரன், திருச்சியில் இருந்து சுற்றுப்பயணத்தை தொடங்கிய விஜய் போன்ற பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை தாங்கி வருகிறது இந்த இதழ். இவை அனைத்தும் வாசகர்கள் இடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பல்வேறு விவாதங்களுக்கும் வித்திட்டவை. நமது Times of Republic நாளிதழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் உங்களின் பேராதரவுடன் வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த ஊடகமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. வாசகர்கள் ஆகிய நீங்கள் தான் எங்களுக்கு ஆணி வேர். உங்களால் தான் இமயத்தை தொட முடியும். என்றும் உங்கள் ஆதரவோடு பயணிக்கிறேம்.

**– Times of Republic**
**குழுவின் சார்பாக நன்றிகள்!**



முதன்மை ஆசிரியர்
**ஜெ. சாமிநாதன்**

# தலையங்கம்

**அண்டை நாடுகளில் புரட்சி- சொல்வது என்ன?**

அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் மக்கள் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி மாற்றம் கண்டுள்ளதை கண்கூடாக பார்த்தோம். 2022 முதல் நடப்பாண்டு வரை 3 ஆண்டுகளிலேயே இவை நிகழ்ந்ததன் காரணம் ஒன்று மட்டுமே. மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே உருவான மாபெரும் இடைவெளி தான். மூன்று நாடுகளிலும் மக்களாட்சி நடைபெற்றாலும், அதிகார போதையில் மமதையில் மக்களின் வாழ்வாதாரத்தை கண்டுகொள்ளாமல் தங்கள் இஷ்டத்துக்கு வாழ்ந்ததன் விளைவை அனுபவித்து வருகிறார்கள். இலங்கையில் கொடிகட்டிப் பறந்த ராஜபக்சே குடும்பம், அதே நாட்டில் பேச்சு மூச்சு இல்லாமல் ஒடுங்கி போய் கிடக்கிறது. வங்கதேச தந்தை எனப்படும் முஜிபுர் ரகுமானின் மகளான பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, நாடு தப்பி, இந்தியாவில் தஞ்சம். அடுத்து நேபாளத்தில் மூன்றே நாளில் முடிக்கப்பட்ட சர்மா ஒலியின் ஆட்சி. மக்கள் புரட்சிக்கு முன்னால் ஆட்சியாளர்களின் அகங்காரம் செல்லுபடியாகாது என்பதற்கான சாட்சிகள் இவை. அதிகார போதையில் எதிர்க்கட்சிகளை வஞ்சிப்பது, மக்களுக்கு எதிரான சிந்தனை, கருத்துக்களை விதைப்பது, ஒடுக்குவது, ஒருசாராரை குறிவைத்து தாக்குவது, வேண்டியவர்களுக்கு எல்லாம் செய்வது, பகட்டு வாழ்க்கை எல்லாம் தூசுதான். அரசியல் அமைப்பில் ஒவ்வொரு அமைப்புக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை தனக்கென மாற்றி அமைத்து, மிரட்டல் மூலம் சாதிக்க நினைத்தால் கிடைப்பது என்னவோ அதுதான். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற வாசகத்தை முன்னோர்கள் சும்மா சொல்லி வைக்கவில்லை.

# TIMES MAGAZINE

## Editor & Publisher



சி.நவீன் பிரகாஷ்

## Editor-in-Chief



ஜெ.சாமிநாதன்

## Advisory Panel

சேகர், எஸ்.பி., (சிறைத்துறை ஓய்வு)



அஜய் பென்சமின்


## Legal Advisors



ஆர்.சி.பால்கனகராஜ்



கிருஷ்ணகுமார்



அக்பர்பாஷா



கார்த்திக்



ஜெ.ரூபன்

## Chief Reporters



எஸ்.ஜாகீர் ஹுசேன்

டி.தாகூர்

பி.ஹரிஹரசுதன்



கே.கார்த்திகேயன்

ஜெ.நவநீதகிருஷ்ணன்



எஸ்.நடராஜ்



பா.சிவக்குமார்

சி.எஸ்.ஆர்.ஜீவன்

## Administration & Operations



ஆரத்தி . தி
Administration & Operations head



பி. அரசுகுமார்
Senior Video Editor



பா. சுகேஷ்
Senior Video Editor



சுதிரேசன் தா
VIDEO EDITOR



நவீன் ராகவேந்திரா மா
Video Editor



ஆண்டோ. எம்
Graphic Designer



பா . சதீஷ் குமார்
Graphic Designer



மோ . யோகலக்ஷ்மி
Graphic Designer




ஆர். மேரில்பேர்ட் தாஸ்
Voice Over Artist

திலகா
Voice Over Artist




ராதிகா நெடுஞ்செழியன்
Voice Over Artist


## Associate Digital News Contributors:




கே.கோபிநாத் · சரண்யா · விக்னேஷ் · பெரியசாமி · ஆர்.மணிகண்டன் · மதிநாதுள் முசால்மாத்




தாமரைக்கனி · கோகுலகிருஷ்ணன் · கே.செல்வம் · சைரில் · எஸ்.கவியரசு · பி.வினித்குமார்




செந்தில்குமார் · எம்.அரிகாந்த் · கோபிஆனந்த் · எம்.ரிசேஷ் ராஜ் · மாதுரி · டி.விக்னேஷ்




பிரமோத் · ஓம் பிரகாஷ் கவுர் · மனோ · இ.பிரசாந்த் · கிளாட்சன் ரிட்சர்ட் · ஹரி பாலசந்திரன்




ஜானி ஆம்புரோஸ் · பிரசாத் பெருமாள் · பிரணவ் · சரத்குமார் · ஜெ.எபினேசன் · பி.விக்னேஷ்




சாந்தகுமார் · கே.சித்தார்த்தன் · தினேஷ்கவுர் · தினகரன் · அருணாச்சலம் · தீனதயாளன்




கே.என்.சி. சரவணகுமார் · சங்கீதா · ஏ.நரேஷ்குமார் · ஏ.பிரேம்குமார் · எஸ்.ஐ. நாராயணன் · பிரபா



பாஸ்கோ மாணிக்கம் · சேகர் · ரேவதி · கே.கார்த்திகேயன் · கே.வி.பாலச்சந்திரா · ஜி.சதீஷ்குமார்



சாமுவேல் · பார்த்திபன் · ஜெ.மோகன்குமார் · சஸ்லன் · யூ.ராகுல் · சதீஷ்



எம்.கிருஷ்ணகுமார் · சாந்தகுமார் · ஏ.தினேஷ் · மகிமான் · நாராயணசாமி · பிரவீன்




# கரூர் சம்பவத்திலிருந்து மீண்டு(ம்) வந்த விஜய்

கரூரில் கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி மாலையில் நடந்த கூட்டத்தில் கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்ட நிலையில் அங்கு அவசர அவசரமாக பேசிவிட்டுப் புறப்பட்ட விஜய், விமானம் மூலம் திருச்சியில் இருந்து சென்னை வந்தடைந்தார். இந்தக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த நிலையில், விஜய் தனது எக்ஸ் பக்கத்தில் 2 பதிவுகளை வெளியிட்டார். சில நாட்களுக்குப் பிறகு, விஜய் பேசி பதிவு செய்யப்பட்ட வீடியோ ஒன்றும் வெளியானது. அதற்குப் பிறகு கட்சி மௌனமானது.

கட்சியின் அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் அக்டோபர் 1ஆம் தேதியன்று ஒரு பதிவு வெளியானது. அதில் "நம் கழகத் தலைவர் அவர்களின் அடுத்த இரண்டு வாரங்களுக்கான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியானது தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது. இந்த மக்கள் சந்திப்பு தொடர்பான புதிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை நம் கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறோம்" எனக் கூறப்பட்டிருந்தது. கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 20 லட்சம் ரூபாய் இழப்பீடும் காயமடைந்தவர்களுக்கு அதற்குரிய இழப்பீடையும் தவெக தலைவர் விஜய் அறிவித்திருந்தார்.

சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பிறகு



உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் வீடியோ அழைப்பு (Video call) மூலம் விஜய் பேசினார். வழக்கு விசாரணை மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது.

கரூர் சென்று கூட்ட நெரிசலில் இறந்தவர்களின் குடும்பத்தினரை விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க விரும்புவதாகக் கோரி கடிதம் ஒன்று அளிக்கப்பட்டது. அந்த திசையில் வேறு எந்த முன்னேற்றமும் தென்படவில்லை.

சம்பவம் நடந்து சில நாட்களுக்குப் பிறகு, விஜய் பேசி பதிவு செய்யப்பட்ட வீடியோ ஒன்று வெளியானது. கரூர் சம்பவத்தில் என்ன நடந்தது என்பது குறித்து தங்கள் தரப்பை விரிவாக முன்வைக்க எந்த இரண்டாம் கட்ட தலைவர்களும் முன்வரவில்லை. இதனை பயன்படுத்திக் கொண்ட மற்ற கட்சிகள் தவெகவையும் விஜயையும் பல வகையில் விமர்சிக்க தொடங்கினர். இந்த ஒட்டுமொத்த சம்பவத்திற்கு விஜயின் அலட்சியம் தான் காரணம் என ஆளும் திமுக அரசும் விஜயின் மௌனத்தை பயன்படுத்திக்கொண்ட அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தவெக அதிமுகவுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பு இருப்பதாகவும் மறைமுகமாக தெரிவித்தார்.

பல திசையிலிருந்து தவெக மற்றும் விஜய்க்கு எதிரான விமர்சனங்களும் நெகட்டிவ் கருத்துக்களும் எழத் தொடங்கின.



தமிழ்நாட்டில் தவெகவின் வளர்ச்சி மிகவும் வேகமாகவும் பெரிதாகவும் இருப்பதைக் கண்டு பயந்த அரசியல் கட்சிகள் இந்த சம்பவத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தேர்தல் நோக்கத்தில் அரசியலாக்க பார்த்தனர். அந்த வகையில் விஜய் கட்சியை கலைத்துக் கொண்டே போகலாம் என்னும் அளவிற்கு விமர்சனங்கள் அவர் மீது எழுந்தன.

ஒரு கட்டத்தில் கரூர் சம்பவம் குறித்து யாருமே பேசாத நிலை ஏற்பட்டது. வழக்கமாக செய்தியாளர்களை சந்திக்கும் தலைவர்கள் கூட கரூர் சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்தனர். அதேபோல சினிமா பிரபலங்களும்கூட கரூர் சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்தனர்.

எனினும் பிரபல பத்திரிகையாளர்களான பெலிக்ஸ் ஜெரால்ட், மாரிதாஸ் போன்றோர் விஜய் மீது தவறு இருந்தாலும் இதில் சரிபங்கு தவறு ஆளும் அரசு மீதும் கரூர் மாவட்ட காவல்துறை மீது இருப்பதாக குற்றம்சாட்டினர். இந்த கருத்திற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாளுக்கு நாள் இந்த சம்பவத்தின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே போனது. இது தொடர்பாக சட்டரீதியாக அணுக வேண்டும்








என்ற நோக்கத்தில் அமைதியை காத்த தவெக ஒரு கட்டத்தில் சட்டரீதியான அணுகுமுறைக்கு பிறகு செய்தியாளர்களை சந்திக்க தொடங்கியது.

இந்த கரூர் சம்பவம் தொடர்பான விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டும் எனக்கு உச்ச நீதிமன்றத்தில் ஆதவ் அர்ஜுனா மனு தாக்கல் செய்திருந்தார். இதற்கான விசாரணைக்காக டெல்லிக்கு சென்ற ஆதவ் அர்ஜுனாவின் செய்தியாளர் சந்திப்பு அரசியல் களத்திலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஆதவ் அர்ஜுனா தவெக முடக்க திமுக முயற்சித்ததாகவும் காவல்துறை இந்த கரூர் சம்பவத்தில் பெரும் அளவில் வேடிக்கை காட்டி இருப்பதாகவும் பகிரங்கமாக தெரிவித்தார்.

தவெக கட்சி தலைவர் விஜய் மற்றும் தவெக தொண்டர்கள் விரும்பியது போல கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டது. அதன் பிறகு மக்கள் மற்றும் அரசியல் களத்தில் இந்த சம்பவம் மீதான பார்வை மாறத் தொடங்கியது. அதில் மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது நடிகர் அஜித்தின் பேட்டிதான்.

தமிழ் சினிமாவில் நடிகர் விஜய் மற்றும் அஜித் போட்டியாளர்களாகவே பார்க்கப்படுகின்றனர். இருவருக்கும் இடையில்



சுமுகமான நட்பு இருந்தாலும் அஜித் மற்றும் விஜய் ரசிகர்கள் அவர்களை போட்டியாளர்களாக பார்த்து சமூக ஊடகங்களிலும் திரைப்படங்கள் வெளியாகும் போதும் சண்டையிடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். ஆனால் அஜித் இந்த கரூர் சம்பவம் குறித்து பேசும்போது விஜய்க்கு ஆதரவான தனது கருத்தை வெளியிட்டதால் மிகவும் இந்த கரூர் சம்பவத்தின் மீதான பார்வை மேலும் மாறத் தொடங்கியது.

இந்த பேட்டியில் பேசிய அஜித், "கரூர் கூட்ட நெரிசல் பிரச்னைக்கு அந்த ஒரு தனிப்பட்ட நபர் மட்டுமே பொறுப்பு கிடையாது. நாம் அனைவருமே பொறுப்புதான். முக்கியமாக ஊடகங்களுக்கும் இதில் பங்கிருக்கிறது. கூட்டத்தைக் கூட்டி செல்வாக்கைக் காட்டும் ஒரு சமுதாயமாக நாம் மாறிவிட்டோம்" என்றார் அஜித்.

மேலும், "இது ஏன் ஒரு கிரிக்கெட் போட்டியில் நடப்பதில்லை? ஆனால் திரையரங்குகளில் நடக்கிறது. பிரபலங்கள், திரைத்துறையினர் கலந்துகொள்ளும் இடங்களில் மட்டும் ஏன் நடக்கிறது. இது திரைத்துறை மீதே தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்தும். இது நமக்கு வேண்டாம்" என்று கூறினார்.


இது ஒரு சமுதாயமாக அனைவரின் தோல்வி என்று குறிப்பிட்டார் அஜித். "இது அந்த ஒரு தனி நபருடைய தவறல்ல. நான் உள்பட நாம் அனைவருமே இதற்கு


பொறுப்புதான். கூட்டம் கூட்டுதலின் மேல் இருக்கும் மோகத்திலிருந்து நாம் விலக வேண்டும். 140 கோடி மக்கள் வாழும் இந்த நாட்டில் கூட்டம் கூட்டுவது ஒன்றும் அவ்வளவு பெரிய விஷயம் இல்லை. அதை வைத்து நம் செல்வாக்கை காட்டத் தேவையில்லை" என்றார் அஜித்.

அஜித் பேசிய இந்த விஷயம் இந்த சம்பவத்தின் மீதான பிம்பத்தை மாற்றியது. இதற்கிடையில் தவெக தலைவர் விஜய் அதிரடியான அறிக்கைகளை தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்டார். அந்த அறிக்கையில் நேரடியாக திமுக அரசை விமர்சிக்கும் வகையில் அவர் குறிப்பிட்டிருந்த விஷயம் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பாதிக்கப்பட்ட மக்களை கரூருக்கே சென்று பார்த்து அவர்களுக்கான இழப்பீட்டை தந்து ஆறுதல் தர வைக்க வேண்டும் என விஜய் பெரிய அளவில் முயற்சித்தார். ஆனால் அவருக்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், சென்னை மகாபலிபுரத்தில் இருக்கும் தனியார் திருமண மண்டபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை அழைத்து அவர்களுடன் அமர்ந்து பேசி ஆறுதல் கூறி தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் காலில் விழுந்து கதறி அழுதிருக்கிறார் விஜய். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இழப்பீட்டு தொகையான 20 லட்சத்தையும் அவர் வழங்கி இருக்கிறார்.

இந்த சம்பவம் பார்க்கும்











அனைவரையும் கண்கலங்க வைத்தது. ஆனால் இதையுமே தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள துடித்தது திமுக. அந்த வகையில் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் ஒரு குடும்பம் விஜயை சந்திக்க மறுத்ததாக கூறி அந்த பணம் தேவையில்லை எனவும் பேட்டி வழங்க வைத்தது. திமுகவின் தூண்டுதலால் தான் அந்த குடும்பம் வரவில்லை என விஷயம் கசிந்தது. தவெகவிற்காக திமுக தோன்றிய பள்ளத்தில் திமுகவே விழுந்தது தான் இந்த சம்பவத்தின் திருப்புமுனை.

கரூர் சம்பவத்திற்கு பிறகு சுற்றுப் பயணங்களை ஒத்திவைத்த விஜய் தீவிரமாக தனது தேர்தல் வேலைகளில் முனைப்பு காட்ட ஆரம்பித்தார். குறிப்பாக தேர்தலுக்காக பொதுச் சின்னம் கோருவது, வேட்பாளர்களை இறுதி செய்வது, தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான வேலைகளில் கட்சி தொண்டர்களையும் மாவட்ட செயலாளர்களையும் ஈடுபடுத்துவது என பல வேலைகளில் தற்போது விஜய் ஈடுபட தொடங்கியுள்ளார்.

அடி வாங்க அடி வாங்க தான்



கல் சிலையாகும் என்பார்கள். அப்படி ஒரு கட்சி துவங்கிய சிறிய காலகட்டத்திற்குள் பல அனுபவங்களை பெற்றிருக்கிறது தவெக. அந்த வகையில் வரும் சட்டமன்ற தேர்தலுக்கான ஆயத்த பணிகளில் ஈடுபட்டு வரும் தவெக இந்த கரூர் சம்பவத்தின் அனுபவத்தை பயன்படுத்திக்கொண்டு எந்தெந்த இடத்தில் எந்தெந்த மாதிரியான கையாடல்களை பயன்படுத்த வேண்டும் என்பதனை தெரிந்து வைத்திருக்கிறது.

சமீப காலமாக திமுக அரசு மற்றும் முதலமைச்சர் மு க ஸ்டாலின் மீது சரமாரியாக விமர்சனங்களை விஜய் முன்வைத்து வருகிறார். மேலும் தற்போது கரூர் சம்பவத்திற்கு பிறகு சேலம் மாவட்டத்தில் அவரது சுற்றுப்பயணத்தை துவங்குவதற்கான விருப்பத்தையும் விஜய் கோரி இருக்கிறார். வார இறுதி நாட்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட விஜய் தற்போது வார நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள தயாராக இருக்கிறார். கரூர் சம்பவத்தினால் துவண்டு போன தவெக மற்றும் விஜய் தற்போது மீண்டு(ம்) பீனிக்ஸ் பறவையாக வருகிறது..






fast track
Taxi App
Chennai is Calling
Pick up & Explore
Local
Package
Select Package
fast track
044 2888 9999 | 6000 6000
DOWNLOAD THE FASTTRACK TAXI APP
SCAN TO DOWNLOAD APP

PeeYesYem | HYUNDAI
DRIVE TO SUCCESS

HYUNDAI

# Bring Home a PeeYesYem Hyundai CRETA Electric today!




## Undisputed. Ultimate. Now electric.

Contact Now
9600114000

**PEEYESYEM HYUNDAI**
Chennai | Madurai | Tuticorin | Ramnad | Karaikudi | Sivagangai | Kovilpatti | Tiruchendur




**TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294**
**Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH**